www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V12T

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

12049

-----

வகுப்பு 12

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

பகுதி -I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. (சரியான விடை தேர்க)** **14×1=14**

1) 'மீண்டுமந்த பழமைநலம் புதுக்குதற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க ங இரண்டும் சரி

2) பொதிகை என்பது எந்த மலையைக் குறிக்கும்?
   அ) குற்றாலமலை ஆ) விந்தியமலை இ) இமயமலை ஈ) சாமிமலை

3) திறனாய்வுக்கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ............
   அ) நா.வானமாமலை ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
   இ) தி.சு.நடராசன் ஈ) பாரதியார்

4) அய்யப்ப மாதவன் உருவாக்கிய கவிதைக் குறும்படம் ..............
   அ) நீர்வெளி ஆ) இன்று
   இ) மஸ்னவி ஈ) மழைக்குப் பிறகும் மழை

5) தமிழில் திணைப்பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

6) பொருத்தி விடை தேர்க
   அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப்பமை
   ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப்பன்மை
   இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப்பன்மைப் பெயர்கள்
   ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்
   அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

7) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

8) காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்
   அ) பாலைக்கலி ஆ) முல்லைக்கலி இ) குறிஞ்சிக்கலி ஈ) நெய்தற்கலி

9) 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்னும் கருத்தை உணர்த்தும் கதை
   அ) முதல்கல் ஆ) தலைக்குளம் இ) உரிமைத்தாகம் ஈ) கோடை மழை

10) கீழ்க்காண்பனவற்றுள் பக்தவத்சல பாரதி இயற்றாத நூல் ............
   அ) பாணர் இனவரைவியல் ஆ) தமிழர் உணவு
   இ) தமிழர் மானிடவியல் ஈ) நுண்கலைகள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11) திருக்குறள் ........... பாவினால் ஆன நூல்

அ) சிந்தியல் வெண்பா ஆ) குறள் வெண்பா

இ) ஆசிரியப்பா ஈ) நேரிசை வெண்பா

12) திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எந்த நூற்றாண்டில் அதிகம் இருந்தன?

அ) 12 ஆம் ஆ) 17 ஆம் இ) 18 ஆம் ஈ) 19 ஆம்

13) 'மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப்புகட்ட மிக நீ வளர்ந்தாய்' என்னும் வரிகள் இடம்பெற்ற நூல்

அ) புறநானூறு ஆ) கலிங்கத்துப்பரணி

இ) தமிழ்விடு தூது ஈ) நாலடியார்

14) 'Conviction' என்பதன் தமிழாக்கம்

அ) சாட்டுரை ஆ) தண்டனை இ) வாதி ஈ) அதிகார எல்லை

## பகுதி -II

### பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி** **3×2=6**

15) கவிஞர் சிற்பி தென்தமிழை எவ்வாறு வரச் சொல்கிறார்?

16) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

17) மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

18) கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி** **2×2=4**

19) பசுமைக்குடில் வாயுக்கள் எவை?

20) முறை வைப்பு என்று எதனைக் கூறுவார்கள்?

21) சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக

### பிரிவு -3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடையளி** **7×2=14**

22) **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக**

அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்?

ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**

கலை, களை, கழை

24) **தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக**

அ) அவன் வெண்மதியிடம் பேசினாய்.

ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

25) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) செய்த ஆ) தந்தனன்

26) **கலைச்சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் தருக.**

அ) Stapler ஆ) Jurisdiction

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) புள்ளைக்கு உடம்பு சரியில்ல மூணு நாளா சிரமப்படுது

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனார்

28) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக.**

அ) வெங்கதிர் ஆ) முன்னுடை

29) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தாமரை

30) படிமத்தின் வகைகள் யாவை?

## பகுதி -III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி** **2×4=8**

31) 'ஏங்கொலி ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக

32) குகனொடு ஐவராகி, வீடணனொடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமென்கிறார்?

34) 'யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே' உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி** **2×4=8**

35) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.

37) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க

38) அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி** **3×4=12**

39) 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' - என்னும் பழமொழியினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

40) சொற்பின் வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் - இக்குறளில் பயின்றுவரும் அணி சுட்டி விளக்குக.

41) **தமிழாக்கம் தருக**

அ) A new language is a new life

ஆ) Knowledge of language is the doorway to wisdom

இ) The limits of my language are the limits of my world

ஈ) Learning is a treasure that will follow its owner everywhere

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42) பா நயம் பாராட்டுக. (மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டும்ப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

- கவிமணி தேசிய விநாயகம்

43) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் எட்டு வரிகளில் கவிதை புனைக

நட்பு (அல்லது) இயற்கை

## பகுதி -IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44) அ) பண்பின் படிவமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக

**(அல்லது)**

ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி நும் பகுதியின் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

45) அ) பண்டையகாலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக

**(அல்லது)**

ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை விளக்குக

46) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று சமூகபற்று ஆகியவற்றை விவரிக்க

**(அல்லது)**

ஆ) கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன - இது குறித்த நும் கருத்தை எழுதுக.

## பகுதி -V

**அடி பிறழாமல் செய்யுள் அடிகளை எழுதுக.** **4+2=6**

47) அ) 'அறிவும் புகழும்.....' எனத் தொடங்கி அத்திசைச் சோறே' என முடியும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

ஆ) 'படும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

- - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com